பக்கங்கள் 15 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 06 புதன்கிழமை 23.10.2024 | அதிர்வு 83


யாழ். மாவட்டத்தில் போட்டியிடும்

## வேட்பாளர் ஒருவர் திடீர் உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)



நடைபெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தலில் யாழ்ப் பாணம் தேர்தல் மாவட் 02


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காகச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி 02

### தாக்குதல் ஆபத்தையடுத்து

# அறுகம்பே பகுதியில் பலத்த பாதுகாப்பு!

**அங்கு செல்ல வேண்டாம் என்று தங்கள் பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை**





(பாறுக் ஷிஹான்)

“அம்பாறை மாவட்டம், பொத்துவில் - அறுகம்பே பகுதி சுற்றுலா இடங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படக் கூடும். எனவே, அமெரிக்கப் பிரஜைகள், அங்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து அறுகம்பை பகுதி சுற்றுலா இடங்களில் பாதுகாப்பு பலப்படுத் 02

## வடக்கில் அரசியல்வாதிகளால் திட்டமிட்டு சூறையாடப்படுகின்றன கனிய வளங்கள்!

### அமரிக்கத் தூதுவரிடம் ஆளுநர் முறையீடு

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் கனிய வளங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அரசியல்வாதிகளால் சூறையாடப்படுகின்றன என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இன்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே வடக்கு மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார். 02





# யாழில் 1400 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 1400 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் நடமாடுகின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 1400 போதை மாத்திரைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டன.

காணி விடுவிப்பு தொடர்பான விபரங்களை வடக்கு ஆளுநரிடம் அமெரிக்கத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

"ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கு மாகாணத்தில் காணி சம்பந்தப்பட்ட பிணக்குகள், சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புகள் பாரியளவில் காணப்படுகின்றன. அவற்றைத் தீர்ப்பதற்குத் தற்போது உள்ள அரசுடன் கலந்தாலோசித்து சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்று அமெரிக்கத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இதேநேரம் வடக்கில் உள்ள முக்கிய பிரச்சினையாகவும், இயற்கைப் பாதுகாப்பாகவும் காணப்படும் கனிய வளங்கள் வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் திட்டமிட்டு அரசியல்வாதிகளால் சூறையாடப்படுகின்றன என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அமெரிக்கத் தூதுவர், வடக்கு மாகாண அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்று தெரிவித்ததுடன் இதற்கு ஆளுநரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டணியில் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும், வல்வெட்டித்துறை நகர சபை முன்னாள் உறுப்பினரும் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவருமான இனியவன் என அழைக்கப்படும் செந்திவேல் தமிழினியன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ் . போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி வேட்பாளரின் மறைவுக்கு முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அதில், "எனது உடுப்பிட்டி தொகுதி இணைப்பாளரும் முன்னாள் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான எனது அன்புச் சகோதரன் செந்திவேல் தமிழினியனின் (இனியவன்) மறைவுச் செய்தியை கலங்கிய மனதுடன் அறியத்தருகின்றேன்.

அன்னாரின் இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. இந்தத் துயரத் தருணத்தில் நாம் அனைவரும் அன்னாரின் குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரோடும் துணை நிற்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன்." – என்று அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

## ஜோன்ஸ்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

பொருத்தப்பட்ட அதிசொகுசு காரை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக வாக்குமூலம் வழங்குவதற்காக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றிருந்தார்.

இதனிடையே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று பிடியாணை பிறப்பித்திருந்தது.

சதொச ஊழியர் குழுவைக் கடமையிலிருந்து நீக்கி, வேறு பணிகளில் ஈடுபடுத்திய வழக்கில் மன்றில் ஆஜராகாததால் இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

## அறுகம்பே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள பிரபல சுற்றுலாத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என நம்பகமான தகவல் கிடைத்துள்ளது என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பயண ஆலோசனையை வெளியிட்டு, அமெரிக்கத் தூதரகம் சந்தேகப்படும்படியான எதையும் கண்டால் 119 என்ற எண்ணுக்கு அழைக்குமாறு தெரிவித்துள்ளது.

இன்று அதிகாலை அந்தப் பகுதிக்கு விரைந்த முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார், சுற்றுலா முக்கியத்துவ இடங்களில் சந்தேகத்துக்கிடமான வாகனங்களை இடைமறித்து சோதனை செய்வதுடன் தற்காலிக வீதித் தடைகளையும் ஏற்படுத்தி அப்பகுதியால் சென்று வரும் வாகனங்களையும் பதிவு செய்து வருகின்றனர்.

அறுகம்பே பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அறுகம்பே மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் இஸ்ரேலியர்கள் அதிகமாக அலைச்சறுக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், எனவே அவர்களுக்கு ஆபத்து நேரிடலாம் எனவும், கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமக்குத் தகவல் கிடைத்துள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.





# தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக இல்லை என்பது மக்களின் ஆதங்கமாக உள்ளது!

## 'சங்கு' சின்னத்தின் வேட்பாளர் கஜதீபன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"ஒன்றுபட்ட தரப்பாக, ஒற்றுமையாகத் தமிழ்க் கட்சிகள் இல்லை என்கின்ற ஆதங்கம் மக்கள் மத்தியில் இருக்கின்றது. ஆனால், சங்கை சின்னமாகக் கொண்டிருக்கின்ற நாங்கள் மட்டுமே ஐந்து கட்சிகளை ஒன்றிணைத்து இந்தத் தேர்தல் களத்தைக் காண்கின்றோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான பா.கஜதீபன் தெரிவித்தார்.

கிளிநொச்சி – பரந்தனில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலுக்குப் பின்பாக நடைபெறவிருக்கின்ற அரசியல் நிகழ்வுகளில், அரசியல் மாற்றங்களில் இந்த அணியுடன் கொள்கை அடிப்படையில் ஒத்து வேலை செய்யக்கூடிய அணியினரையும் ஒன்றுதிரட்டி, ஒரு பெரிய அளவிலான கட்டமைப்பை உருவாக்கி நாங்கள் வேலை செய்ய வேண்டி இருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய சந்தை வியாபாரிகள் தமக்கு இருக்கக்கூடிய மிகப்பெரிய அளவிலான பிரச்சினைகளை எம்முடன் பகிர்ந்திருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இங்கு செயற்பட்டவர்களின் பலவீனமாகவே அது இருக்கின்றது. அந்த விடயங்கள் நிவர்த்தி செய்யப்படும்."

– என்றார்.







# மின்சாரம் தாக்கி இளம் தாய் மரணம்!



மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாந்தோட்டை, லுனுகம்வெஹெர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று லுனுகம்வெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

யமுனா சதமாலி ஜயதிலக்க என்ற 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி தாயார் தனது வீட்டின் ஜன்னலில் துணியை பொருத்துவதற்காகச் சுவரில் ஆணி அடித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, உயிரிழந்த தாயாரின் இரண்டரை வயது குழந்தை, இரும்பு ஆணி ஒன்றை எடுத்து அருகிலிருந்த மின் இணைப்பில் பொருத்தி விளையாடிக்கொண்டிருந்துள்ளார்.

இதனை அவதானித்த எட்டு வயது குழந்தை, உயிரிழந்த தாயாரிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

பின்னர், இந்தத் தாயார் உடனடியாகத் தனது குழந்தைகளை அங்கிருந்து வெளியே அழைத்துச் சென்று, மின் இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு ஆணியை வெளியே எடுக்க முயன்றபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாயாரின் கணவர் கொழும்பில் வேலை செய்து வருகின்றார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுனுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# குளவிக்கொட்டுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழப்பு!

(ராமு தனராஜா)

மடுல்சீமை – பிட்டமாறுவ பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிட்டமாறுவ, கல்பொத்தவெல பகுதியில் வசிக்கும் 85 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று மடுல்சீமை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் வீட்டின் முன் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்துக்குச் சென்று விளக்கு ஏற்றும்போது குளவி கலைந்து அவரைத் தாக்கியுள்ளது .

இதன்போது வீட்டில் உள்ளே சென்று தன்னைக் குளவி தாக்கியது என்று கூறிவிட்டு படுத்து உறங்கிய அவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.



# தேசிய உளவள தினத்தை முன்னிட்டு இடம்பெற்றுள்ளது வீதி நாடக நிகழ்வு

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் தேசிய உளவள தினத்தை முன்னிட்டு அலுவலக உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட வீதிநாடக நிகழ்வு நேற்று (22) பிரதேச செயலக முன்றலில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் “பணியிடத்தில் மன நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது” எனும் தலைப்பிலான இந்த வீதி நாடக நிகழவை மட்டக்களப்பு தேற்றாத்தீவு மகா



வித்தியாலய மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்தனர்.

நிகழ்வில் வேலைத்தளங்களில் ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல்களையும் சிறப்பான முறையில் மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்தனர். அவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர் களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வைப் பிரதேச செயலக உளவளத் துணை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.கோகிலா ஒழுங்கமைப்பு செய்திருந்தார்.

உளவள தினத்தை முன்னிட்டு பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் உளநலத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தலுக்கு எதிரான வழக்கு

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பெரும்பாலும் முழுமும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. வாக்கு யுத்ததுக்கான களம் தயாராகித் திறந்து விடப்பட்டு விட்டது. தரப்புக்கள், கட்சிகள், அணிகள், சுயேச்சை குழுக்கள் தங்கள் தங்கள் கன்னைகளின் பிரசாரங்களை மும்மரமாக ஆரம்பித்து விட்டன.

பொதுத் தேர்தல் களத்துக்கான நகர்வுகள் முழு வீச்சில் - முழு மூச்சில் - முன்னெடுக்கப்பட்டுருக்கும் இந்தச் சமயத்தில் தேர்தல் திகதி குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் தனது அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகிக்கும் போது புதிய பொது தேர்தலுக்கான வேட்பு மனு ஏற்றுக் கொள்ளும் திகதி, தேர்தல் நடைபெறும் திகதி, புதிய நாடாளுமன்றம் கூடும் திகதி ஆகியவற்றையும் அந்த பழைய நாடாளுமன்றக் கலைப்புப் பிரகடனத்தில் குறிப்பிட வேண்டும் என்பது அரசமைப்புச் சட்டக் கடப்பாடாகும்.

புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அநுரகுமார திஸநாயக்க பதவியேற்ற கையோடு மூன்று பேர் கொண்ட அமைச்சரவையை அமைத்தமை மட்டுமல்லாமல் நாடாளுமன்றத்தையும் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவில் பொதுத் தேர்தல் வாக்களிப்பு தொடர்பாக அவர் எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தியே இப்போது உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்திருக்கின்றது ‘அப்பி ஸ்ரீலங்கா ஜாதிக’ (நாங்கள் ஸ்ரீலங்கா தேசிய நிறுவனம்) என்று அமைப்பு.

தேர்தல் சட்டங்களின்படி வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஐந்து வாரங்களின் பின்னரும் ஏழு வாரங்களுக்கு முன்னரும் உள்ளானதுமான ஒரு திகதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அந்த அமைப்பு தனது மனுவில் சுட்டிக்காட்டி உள்ளது.

கடந்த அக்டோபர் 4 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றமையினால் அதிலிருந்து 5 வாரங்கள் முதல் ஏழு வாரங்கள் என்பது நவம்பர் 15 ஆம் திகதி தொடங்கி நவம்பர் 29 ஆம் திகதி வரை ஆகும். அந்த இடைப்பட்ட நாளில்தான் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற வேண்டும்.

ஆனால் வேட்பு மனுக்கள் தாக்கலாகி ஐந்து வாரங்கள் முடிவதற்கு முன்னரே - நவம்பர் 14ஆம் திகதியே வாக்களிப்பை நடத்துவதற்கு எடுத்த முடிவு சட்ட ரீதியில் தவறானது என மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.


இந்த மனுவை உயர்நீதிமன்றம் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளுமா, ஏற்றுக் கொண்டால் அதன் அடிப்படையில் தேர்தல் திகதியை ஒத்திவைக்க உத்தரவிடுமா என்பவை எல்லாம் இனி நீதிமன்றத்தில்தான் பார்க்கப்பட வேண்டும்

இந்தப் பொதுத் தேர்தல் திகதிப் பிரகடனத்தில் இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளன.

ஒன்று - இது, நிறைவேற்றதிகார ஜனாதிபதி தன்னுடைய விசேடமான அதிகாரத்தை பிரயோகிக்கும் விடயம். ஜனாதிபதியின் அத்தகைய அறிவுறுத்தலில் உயர் நீதிமன்றம் தலையிடுமா என்பது.

அடுத்தது - பொதுவாக ஒரு தேர்தல் பிரகடனம் முன்னெடுக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சமயங்களில் அந்தத் தேர்தல் ஏற்பாடுகளில் நீதிமன்றங்கள் தலையிடுவது குறைவு. சுயாதீனமான தேர்தலுக்கு அனுமதித்து அவை சற்று விலகி இருப்பது வழமை.

இந்த வழக்கில் நீதிமன்றம் என்ன செய்யப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# பன்முக செயற்பாடு தொடர்பில் கருத்துக் களம் நுவரெலியாவில்

(ஆ.ரமேஸ்)

உள்வாங்கல், நல்லிணக்கம் மற்றும் சமூக நியாயத் துக்கான பன்முக செயற்பாடு தொடர்பில் விளக்க பயிற்சி யளிக்கும் கருத்துக் களம் நுவரெலியாவில் இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நுவரெலியா சம்பத் ஹோட்டலில் இரண்டு நாள்கள் இடம்பெற்றன.

இதில் நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த சர்வமத குழுக்களின் குருமார்கள், சிவில் அமைப்புகளின் செயற் பாட்டாளர்கள், அரச ஊழியர்கள், பெண்கள் தலைமைத்துவ அமைப்பினர் மற்றும் ஊடகவியலாளர்கள், இளம் சமூகத்தினர் என பலரும் பங்குபற்றினர்.

இவர்களுக்கான கருத்திட்டப் பயிற்சியை உள்வாங்கல், நல்லிணக்கம் மற்றும் சமூக நியாயத்துக்கான பன்முக செயற்பாட்டு கருத்திட்ட சர்வமத பேரவையின் திட்ட முகா மையாளர் நிரோஷா அந்தணி, செயற்றிட்ட சிரேஷ்ட அதி



காரி ஆய்ஷா ஜெயவர்தன மற்றும் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி இரேஷா உதயானி ஆகியோர் வழங்கினர்.

அத்துடன் மனித சமூகத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் உட்பட சமூகங்களில் பேணப்படும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சிகளும், கருத்தாடல்களும் இடம்பெற் றமையும் குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் பிரதேச மக்களை ஏமாற்ற என்ன பொய் சொல்லப் போகிறார்கள்!

## திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் அமான் அஸீஸ்

(அபு அலா )

பொத்துவில் மக்களுக்கான சுத்தமான குடி தண்ணீரையும் தனி யான கல்வி வலயத்தையும் பெற்றுத் தருவதாகக் கூறி வருடக் கணக்கில் அரசியல் செய்தனர். ஆனால் அதில் ஒன்றும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிய வில்லை. இந்தப் பிரச்சினைக்கு நிச்ச யமாக சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் நிரந்தரமான தீர்வு வழங்கப்படும்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் அமான் அஸீஸ் தெரி வித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகலாவிய ரீதியில் புகழ்பெற்ற ஒரு பிரதேசமாகப் பொத்துவில் காணப் படுகிறது. உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தினமும் இங்குள்ள அறுகம்பே பிரதேசத்துக்கு வந்து செல்கின்றனர். இருந்தாலும் இந்தப் பிரதேசம் அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிக் காணப்படுகிறது.

குறிப்பாக இங்கு காணிப் பிரச்சினை, குடி தண்ணீர் பிரச்சினை என ஏரா ளமான பிரச்சினைகள் உள்ளன. அறு



கம்பே சுற்றுலா பிரதேசம் நவீன வகையில் அபிவிருத்தி செய்யப்பட வில்லை. அங்குள்ள வீதிகள் மிகவும் மோசமாகக் காணப்படுகின்றன. பொத்துவிலில் ஒரு பொது விளையாட்டு மைதானமில்லை. தனியான கல்வி வலயம் குறித்து வருடக்கணக்கில் பேசுகிறார்கள். ஆனால், ஒன்றும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிய வில்லை.

இந்த ஊரினுடைய தேவைகளையும் மக்களுடைய பிரச்சினைகளையும் நிறைவேற்றுவதாக கூறி அரசியல் அதிகாரத்தைப் பெற்றவர்கள், அதில் எவற்றையும் நிறைவு செய்ததாகத் தெரியவில்லை. ஊரினதும் மக்க ளுடையதும் பிரச்சினைகள் அப்படியே இருக்க அரசியல்வாதிகள் மாத்திரம் சுகபோகம் அனுபவித்தனர்.

எனது தந்தை முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம். பி.ஏ.அஸீஸ், பெருந்தலைவர் எம். எச்.எம்.அஷ்ரபின் பாசறையில் வளர்ந்தவர். அவர் பொத்துவில் பிரதேச மக்களின் தேவைகளை அறிந்து சேவையாற்றிய ஒருவர். அவருடைய மறைவுக்கு பின்னர் இந்தப் பிரதேசத்தில் ஒரு சரியான அரசியல் தலைமை இல்லை.

இவ்வாறான நிலையில் பொத்துவில் மக்களின் அழைப்பை ஏற்று இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறேன். நடைபெறப்போகும் நாடாளுமன்ற தேர்தலில் எனது வெற்றிக்கு இந்தப் பிரதேசம் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளமை பெரும் சந்தோஷத்தை ஏற்படுத்தி யுள்ளது.- என்றார்.






# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 15 மில். ரூபா பெறுமதியான உபகரணம்

## பௌத்த தேரர் தலைமையிலான மருத்துவ சங்கம் அன்பளிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

பௌத்த தேரர் தலைமையிலான மருத்துவ சங்கத்தினர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 15 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மருத்துவ சேவைகள் சங்கம், ஆஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட்டுடன் இணைந்து, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு இந்த உதவியை வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்கள் உள்ளூர் சமூகத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்தவும் நல்வாழ்வை மேம்படுத்தவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மருத்துவ சேவை சங்கத்தின் பணிப்பாளர் வண. ராஜவல்லே சுபுதி தேரர், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து உபகரணங்களை தனிப்பட்ட முறையில் பெற்றுக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட் இயக்குனர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், கப்பல் கட்டணம் மற்றும் தொடர்புடைய வரிகளைச்செலுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார்.

ஆதார வைத்தியசாலை கல்முனை வடக்கு வளாகத்தில் அதிகார பூர்வமாக கையளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பணிப்பாளர் வண ராஜவல்லே சுபுதி தேரர், கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரங்க சந்திரசேனவிடம் மருத்துவ உபகரணங்களைக் கையளித்தார்.

மருத்துவ சேவை சங்கம், வன்னி ஹோப் அறக்கட்டளை மற்றும் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் பல பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# மன்னார் நுழைவாயிலில் அமைக்கப்படும் பூங்கா உல்லாசப் பயணிகளை கவரும்!

## மன்னார் அரச அதிபர் கனகேஸ்வரன்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நுழைவாயிலில் அமையப் பெறும் இயற்கை பூங்கா மன்னார் மாவட்டத்துக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு இடமாக அமையும் என்று மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் நுழைவாயிலில் அமைக்கப்படும் நகர கடற்கரை பூங்கா அங்குரார்ப்பண நிகழ்வு திங்கள்கிழமை (21) இடம்பெற்றபோது மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தின் மக்களின் ஒரு முக்கிய தேவைப்பாடாக இருந்த இயற்கை பூங்கா இன்று மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



இந்த இடத்தை மன்னார் நகர சபையிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்றையத் தினமே (21) இயற்கை பூங்கா அமைப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் மன்னார் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவு இன்று நனவாகியதை நான் பார்க்கின்றேன். மன்னார் மாவட்டத்தை உல்லாசப் பயணிகளின் ஒரு கேந்திர இடமாக மாற்றுவதற்கு இந்த பூங்கா ஒரு முக்கிய இடத்தை வகிக்கும்.

இங்கு அமைக்கப்பட இருக்கும் பூங்கா மன்னார் நகர சபை மற்றும் உல்லாசப் பயணத்துறை திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அமையப்பெற இருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் பலவிதமான உல்லாசப் பயணிகளைக் கவரக் கூடிய ஒரு தகவல் மையம். மக்கள் காலை மாலை நேரங்களில் உடற்பயிற்சி செய்யக் கூடியதாகவும், பொழுது போக்காக வந்து இங்கு அமரக் கூடியதாகவும் , விளையாட்டு உபகரணங்கள் கொண்ட வசதிகள் மற்றும் அருகில் படகில் பயணிக்கக்கூடிய வசதிகள் இவ்வாறு பலதரப்பட்ட வசதிகள் கொண்ட ஒரு இடமாக இது அமையப் பெற இருக்கின்றது.

இந்த இயற்கை பூங்காவுக்கான கட்டமைப்புக்களை நகர அபிவிருத்தி சபையினர் முன்னெடுக்க உள்ளனர். இந்த வேலைத் திட்டங்கள் யாவும் நகர அபிவிருத்தி சபையின் திட்டமிடலிலேயே நடைபெறவுள்ளன.

ஆகவே மன்னார் மாவட்ட மக்களின் நீண்டநாள் கனவை நனவாக்க ஒத்துழைத்த யாவருக்கும் நான் மன்னார் மாவட்ட அரச அதிபர் என்ற ரீதியில் நன்றி தெரிவித்து நிற்கின்றேன்.- என்றார்.

# தமிழரசுக்கட்சிக்கு இந்தமுறை அதிக ஆசனங்கள் கிட்டும்!

## கட்சி வேட்பாளர் சரவணபவன் நம்பிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)


தமிழரசுக்கட்சி இந்த முறை அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் போது தான் பேரம் பேசும் சக்தியாக நாடாளுமன்றத்தில் திகழும். அந்தப் பேரம் பேசும் சக்தியைக் கொடுப்பதற்கு மக்கள் அனைவரும் எமது சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிப் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாநகரின் முதல்வராக 5 வருடங்கள் சிறப்பான பணியை வழங்கியிருந்தேன். மட்டக்களப்பு நகரத்துக்கு எனக்கு கிடைத்த அதிகாரம் மாவட்டத்துக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே இந்தப் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

இந்தத் தேர்தலில் வெற்றிபெறும் போது, எமது வளங்களான விவசாயம், மீன்பிடி, கால்நடை என ஏனைய பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு எமது ஒத்துழைப்புடன் முன்னேற்றக் கூடிய வகையில் எமது திட்டங்கள் வகைப்படுத்தப்படும்.



அதே போன்று யுத்தத்தால் கணவனை இழந்தவர்களுக்கான வழிகாட்டிச் செயற்பாடுகளுக்கும், பெருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

தற்சார் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை வழிமொழிந்து அதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

வெள்ளக் காலங்களில் வெள்ளம் ஏற்படாத வகையிலும், வரட்சி காலத்தில் வரட்சி ஏற்படாத வகையிலும் சரியான நீர்முகாமைத்துவத்தைச் செய்யவேண்டும்.

தமிழரசுக்கட்சி இம்முறை அதிக ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும். அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் போதுதான் பேரம் பேசும் சக்தியாக நாடாளுமன்றத்தில் திகழும், அந்த பேரம் பேசும் சக்தியைக் கொடுப்பதற்கு மக்கள் அனைவரும் எமது சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

லஞ்சம் ஊழல்களில் ஈடுபடாதவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறானவர்களைத் தெரிவு செய்யும் போது மிக வினைத்திறனான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம். அப்போது நாடாளுமன்றத்தில் வினைத்திறனான செயற்பாடுகளை நாம் மேற்கொள்ளலாம். அதன் மூலம் எமது பிரதேசம் வளர்ச்சியடையும். அந்த வளர்ச்சி மூலமாக பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடையும்.

தமிழ்த் தேசியச் சிந்தனையுடன் நாம் அனைவரும் தொடர்ச்சியாகப் பயணிக்க வேண்டும். அந்தச் சிந்தனையில் இருக்கும் நாம் அனைவரும் மண்ணையும் மக்களையும் பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்து வீட்டுக்கு வாக்களிக்க வேண்டும். அத்துடன் எனது 7ஆம் இலக்கத்துக்கும் வாக்களிக்க வேண்டும்.

அரசால் அமுல்படுத்தப்படுகின்ற தமிழ்த் தேசியத்துக்கு எதிரான எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஆதரவு வழங்கமாட்டோம்.

ஆனால் நாட்டின் நன்மைக்காக செய்யப்படும் திட்டங்களுக்கு எமது கட்சி ஆதரவு வழங்கும்.- என்றார்.






# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி மன்னார் நானாட்டானில்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி இன்று (23) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியை நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நானாட்டான் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து நடத்தினர். முருங்கன் வீதியில் ஆரம்பிக்கப்பட்டு நானாட்டான் சுற்று வட்டத்தின் வழியாக நானாட்டான் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஒஸ்மான் டெனி , நானாட்டான் மடு சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், நானாட்டான் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், நானாட்டான் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்கள் 80 வீதம் வாக்களித்தால் இரண்டு பிரதிநிதிகளைப் பெறலாம்!

## தமிழரசுக் கட்சி வேட்பாளர் சண்முகம் குகதாசன்

(ஹஸ்பர் ஏ.எச்.)

நடை பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் 80 சதவீதமான வாக்குகளை அளித்தால் இரு பிரதிநிதி களை பெறலாம் என இலங்கை தமிழர சுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுன்ற முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று (22) மாலை இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்தால்தான் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1985 ஆம் ஆண்டு முதல் நில அபகரிப்பு செய்யப்பட்ட விவசாய மக்கள் காணிகளை மீளப் பெறலாம். வன இலாகா 4000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களையும் தொல் பொருள் திணைக்களம் 2600 ஏக்கர்க ளையும் இது போன்று இலங்கை துறை முக அதிகார சபை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களையும் பௌத்த பிக்குகள் விகாரைக்கான கட்டுமானம் என்ற போர்வையில் பல நிலங்களை அபகரித்துள்ளனர்.

இதனை மீட்க தமிழ் மக்களுக்கான பிரதிநிதிகள் தேவை. எனவே தான் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் செயற்படுவதுடன் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களை பெறலாம். ஒற்றுமையாக செயற்படாவிட்டால் தமிழ் பிரதிநிதித் துவம் இல்லாமல் போய்விடும்.

யாழ்ப்பாணத்தில் பல கட்சிகளும் பல சுயேட்சைக் குழுக்களும் களமிறங் கியுள்ளன. தமிழ் வாக்குகளில் மொத்த மாக 98 ஆயிரம் வாக்குகள் காணப் படுகின்றன. இதில் சுமாராக எழுபதாயி ரம் வாக்குகளையாவது தமிழ் மக்கள் அளிக்க வேண்டும். வாக்குகளை அளிப் பதற்காக மக்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இஸ்லாமியர்கள் 80 வீதமான வாக்குகளை அளிக்கின்றனர். தமிழ் மக்கள் 65 வீதமான வாக்குகளையே அளிக்கின்றனர். எனவே இம் முறை 85 வீதமான வாக்குகளை அளிக்க வேண்டும். அப்போதுதான் நம் மண் ணின் தமிழ் பிரதிநிதித்துவம் பாது காக்கப்பட்டு உரிமைகள், அபிவி ருத்திகளைப் பெற முடியும்.



இந்தியாவில் 15 பேரை வைத்து மோடி ஆட்சி நடத்துகிறார். தெலுங்கான மக்கள் ஒற்றுமை காரணமாகவே இந்த ஆட்சி நடைபெறுகிறது. மொத்தமாக 545 உறுப்பினர்களை வைத்து அங்கு ஆட்சி இடம் பெறுகிறது. அது போன்று இங்கு 225 உறுப்பினர்களில் நாம் 25 தமிழ் பிரதிநிதிகளை பெற வேண்டும்.

இவ்வாறாகத்தான் நாம் இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, புளட், ஈபிஆர் எல்எப் போன்ற கட்சிகள் ஒற்றுமையாக இணைந்துள்ளோம். இதனால் நம் பிரதிநிதித்துவத்தை ஒற்றுமை மூலமே பாதுகாக்க முடியும்.- என்றார்.





# நுவரெலியா மாவட்டத்துக்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

**(பொகவந்தலாவ)**

நுவரெலியா மாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கடமைகளை பொறுப்பேற்றார்.

நுவரெலியா மாவட்டத்துக்குப் பொறுப்பான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் வீரசிங்க சுசில் பிரியங்கர டி சில்வா நேற்று முன்தினம் (21) நுவரெலியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிகளைப் பொறுப் பேற்றார்.

முன்னதாக பிரதமரின் பாதுகாப்புப் பிரிவின் தலைவராக கடமையாற்றிய வீரசிங்க சுசில் பிரியங்கர டி சில்வா நுவரெலியா மாவட்டத்துக்குப் பொறுப் பான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக இருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஷான் விஜேசிங்க இடமாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



# தீக் காயத்துடன் 12 வயதுச் சிறுவன் வைத்தியசாலையில் அனுமதி!

## தன்னைத் தானே தீ மூட்டினார் என்று பொலிஸார் தெரிவிப்பு

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

பொகவந்தலாவ செப்பல்டன் என். சீ. தோட்ட பகுதியில் 12 வயது சிறுவன் ஒருவர் தீ காயங்களுக்கு ஆளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனக்குதானே தீ மூட்டி கொண்டதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்த னர். இந்த சம்பவம் நேற்று (22) செவ் வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவரு வதாவது,

அந்தச் சிறுவனின் தந்தை மற்றும் தாயாருக்கு இடையில் தினந்தோறும் சண்டை இடம்பெற்று வந்துள்ளது. இதேபோல் நேற்றும் இருவருக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது.

தனது தாயாரை தாக்கினால் தான் தீ வைத்து கொள்வார் என்று தந்தை யிடம் கூறிய சிறுவன், கூறி தனக்கு தானே தீ வைத்து கொண்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசா ரணைகளில் இருந்து தெரியவந்துள் ளது.

சிறுவனின் முகப் பகுதியில் எரிகா யங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் பொக வந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சிறுவன் டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளைப் பொகவந்தலாவ பொலிஸ ார் மேற்கொண்டு வருகின்றனர். எரிகாயங்களுக்கு உள்ளான சிறுவன் சிகிச்சை பெற்று வருகிறார்.



# இலங்கையின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி...!

இலங்கை அதன் அழகிய கடற்கரைகள் செழிப்பான காடுகள் மற்றும் தொன்மையான வரலாற்று தலங்களால் பரிசுப்படுத்தப்பட்ட நாடாகும். கொரோனா உலகம் முழுவதும் சுற்றுலா துறையை பாதித்த நிலையில் இலங்கையின் சுற்றுலா துறை கூடுதல் சவால்களை எதிர்கொண்டது. 2020 இல் விமான சேவைகள் நிறுத் தப்பட்டு சுற்றுலா நிலையங்கள் மூடப்பட்டன. இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது.

சுற்றுலா இலங்கையின் வருவாய் மற்றும் வேலை வாய்ப்புக்கான முக்கிய ஆதாரமாக உள்ளது. எனவே இத்துறை மீண்டும் செயல்பட வேண்டியது முக்கியம். தற்போது நாட்டின் மீட்டெடுப்பு நடவடிக்கைகள் பாதுகாப்பு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றும் முறையில் நடக்கின்றன. கிராமிய மற்றும் உள்ளூர் சுற்றுலா வளர்ச்சியுடன் மக்கள் இடைவெளியைக் குறைக்கப் புதிய அனுபவங்களை உருவாக்கலாம்.

கொரோனாவுக்கு முன்பு இலங்கையின் சுற்றுலா துறை பூமியின் முக்கிய சுற்றுலா இடங்களுக்குள் ஒன்றாக இருந்தது. 2019 இல் வருடத்தின் முழுவதும் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். அழகிய கடற்கரைகள், அழகிய மலர்கள், அரிய கிராமிய அனுபவங்கள்ளூ மற்றும் தொன்மமான கலைக்கூடங்கள், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கிய காரணமாக அமைந்தன.

தொகுதி மையமாகக் கொண்ட கலை, கலாச்சாரம் மற்றும் இயற்கை வளங்கள் மூலம் இலங்கை சுற்றுலா துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தது. விமான சேவைகள், ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் மிகவும் முன்னேற்றம் அடைந்திருந்தன.

இது மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கு வகித்தது. மேலும் பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்கியது. 2020 இற்கு முன்னர் சுற்றுலா துறை வருவாயின் ஒரு முக்கிய ஆதாரமாக செயல்பட்டது. ஆனால் கொரோனா காலம் இதற்குப் பெரும் தடையாக அமைந்தது.

கொரோனா தாக்கத்துக்குப் பிறகு இலங்கையின் சுற்றுலா துறை மெதுவாக மீண்டும் உயிர்ப்புக்கு வந்துள்ளது. 2021 மற்றும் 2022 இல் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையில் படிப்படியாக மேம்பாடு காணப்பட்டது. அரசு பாதுகாப்பு மற்றும் சுகாதார வழி முறைகளை கடைபிடிக்கும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இதனால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகளின் நம்பிக்கையை மீட்டெடுக்க முடிந்தது. அரசு மீட்டெடுப்புக்கான பல திட்டங்களை செயல்படுத்தி உள்ளூர் மற்றும் தேசிய அளவில் சுற்றுலா முன்னேற்றத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாகக் கிராமிய மற்றும் இயற்கை சுற்றுலா மேம்பாடு, சுற்றுலா அனுபவங்களைப் புதிய அளவுக்குக் கொண்டு வந்துள்ளது. சுற்றுலா தளங்களில் முகக்க வசம், சமூக இடைவெளி மற்றும் சுகாதார சோதனை முறைகளை செயல்படுத்துதல் ஆகியவை மூலமாகப் பயணிகளுக்கு பாதுகாப்பான அனுபவம் வழங்கப் படுகிறது.

தொழில் அதிகாரிகள் மற்றும் அரசு இணைந்து சுற்றுலாத் துறையை மீண்டும் பலப்படுத்துவதற்கான புதிய யோசனைகளை உருவாக்குகின்றனர். வரலாற்று தலங்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை முன்னிறுத்து வதில் ஆர்வம் அதிகரித்து வருகிறது. சுற்றுலா துறை மற்றும் ஒரு ஆரம்பத்தை கொண்டாடுவதற்கான மிகுந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

இலங்கையின் தனித்துவமான அழகும் கலாச்சாரத் தும் புதிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கிய காரணமாக செயல்படுகிறது.

இப்பகுதியில் இலங்கையின் சுற்றுலா துறை மீண்டும் பல முறை பரிசீலனை செய்யப்படுகிறது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கி யமான பங்கு வகிக்க வாய்ப்பு உள்ளது. சுற்றுலா தளங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இதனாலே பயணிகள் பாதுகாப்புடன் அனுபவிக்க முடிகிறது.

சுற்றுலா தொழிலாளர்களுக்கு புதிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் பாது காப்பான மற்றும் நவீன சேவைகளை வழங்க திறன் பெறுகின்றனர். சுற்றுலா நிறுவனங்கள் அரசு மற்றும் உள்ளூர் சமூகங்கள் இணைந்து செயல்படுகின்றன. இது மெதுவாக துறையின் மீட்டெடுப்புக்கு உதவுகிறது. இந்த முயற்சிகள் இலங்கையின் சுற்றுலாத் துறையை மீண்டும் வாழ வைக்க, புதிய வாய்ப்புகளை உருவாக்க, மற்றும் தற்காலிக தடைகளை கடந்த வகையில் எளிமையாகச் செயற்பட உதவுகின்றன.

தொடர்ச்சி▼

# இலங்கையின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி...!

தொடர்ச்சி▲

அரசு சுற்றுலா தளங்கள் மற்றும் ஹோட்டல்களுக்கு சுகாதார நெறிமுறைகளை உருவாக்கி பாதுகாப்பான சுற்றுலா அனுபவங்களை உறுதிப்படுத்தியுள்ளது. அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா நிறுவனங்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கப்பட்டன. இது அவர்களின் மீட்டெடுப்பு நடவடிக்கைகளை ஆதரிக்க உதவுகிறது. சுற்றுலா துறைக்கு வரி தள்ளுபடியும் நிதி ஆதரவும் வழங்கப் படுகிறது.

இலங்கையின் சுற்றுலா துறையின் எதிர்காலம் பல்வேறு புதிய வாய்ப்புகளும் சவால்களும் அடங்கி யதாக உள்ளது. கொரோனா காலத்துக்குப் பின்னர் பயணிகள் பாதுகாப்புக்கான நிலையான நடைமுறை களை எதிர்பார்க்கிறார்கள். மக்கள் தற்போது உள்ளூர் சுற்றுலா மற்றும் அனுபவங்களை ஆராய விரும்புகி றார்கள். இது புதிய வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்கும். ஒன்லைன் முன்பதிவு டிஜிட்டல் அனுபவங்கள் மற்றும் வர்த்தக செயல்பாடுகள் முன்னேறி சுற்றுலா துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும்.

சுற்றுலா அனுபவங்களில் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல், நாட்டின் மரபுகள், கலை மற்றும் நிகழ்வுகள், சுற்றுலா துறையின் முக்கிய அம்சமாக இருக்கும். சர்வதேச அளவிலான விழாக்கள் மற்றும் நிகழ்வுகள், சுற்றுலாவுக்கான வருகையை அதிகரிக்கும்.

உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் சுற்றுலா துறையில் முன்னுரிமை ஆகும். வெளிநாட்டவர்களுக்கான இலங்கை தனது அழகுக்கு, கலாச்சாரம் மூலம் உலகளாவிய சுற்றுலாப் பயணிகளை மீண்டும் ஈர்க்கும் முயற்சியில் இருக்கிறது.

இலங்கையின் சுற்றுலா துறை, புதிய முறைகளால் வளரும் வாய்ப்புகளைச் சந்திக்கத் தயாராக உள்ளது.

சரியான திட்டமிடல் மற்றும் செயல்பாடுகளால் இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும். இலங்கையை உலகளாவிய சுற்றுலா இடமாகப் பரப்புவதற்கான விளம்பரத் திட்டங்கள் உருவாக்கப்பட் டுள்ளன. சமூக ஊடகங்களில் இலங்கையின் சுற்றுலா அழகுகளை முன்னிறுத்தும் பிரச்சாரங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. இந்தத் துறைகளை ஊக்குவிக்க அரசு தனி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. வரலாற்று இடங்களை பாதுகாப்பதற்கும் கலாச்சார நிகழ்வுகளை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றுலா தொழிலாளர்களுக்கு திறன்களை மேம் படுத்த உதவும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆதரவு நடவடிக்கைகள் இலங்கையின் சுற்றுலா துறையின் மீட்டெடுப்பை உறுதிப்படுத்துவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன.

இலங்கையின் சுற்றுலாத் துறை கொரோனா காலத்துக்குப் பிறகு மீண்டும் உயிர்ப்புக்குக் காத்திருக் கிறது. அரசு தனியார் துறை மற்றும் சமூகங்களின் கூட்டுப் பணி இத்துறையை மீண்டும் மீட்டெடுக்க உதவு கின்றது. பாதுகாப்பு சுகாதார நடவடிக்கைகள் உள்ளூர் சுற்றுலா முன்னேற்றம் மற்றும் கலாச்சார உருமாற் றங்கள் ஆகியவை எதிர்காலத்தில் சுற்றுலா துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கும். சுற்றுலா இலங் கையின் பொருளாதாரத்துக்கு முக்கிய பங்காற்றும். அதில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் முன் செல்வதற்கு தயாராக உள்ளது. எங்கள் நாட்டின் அழகு, கலாச்சாரம் மற்றும் வரலாற்று மரபுகளை உலகுக்கு அறிமுகப்படுத்த செயல் மற்றும் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு சுற்றுலா துறையின் எதிர்காலம் ஒரு பெரும் வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கும் என்பது நம்பிக்கை.

**இளங்கோவன் நிரோஷிகா,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

# எவ்வித சலுகைகளுக்கும் நாம் சோரம் போகவில்லை

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் வேட்பாளர் பிரசாத்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் தொடர்ந்து மக்களுக் கான உரிமை தொடர்பாக குரல் கொடுத் துவரும் இயக்கமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயற்பட்டு வருகிறது என்று குறித்த கட்சியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் சோமநாதன் பிரசாத் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை(22) மன்னாரில் இடம் பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின் னர் கடந்த 15 வருடங்களாக எமது கட்சி எவ்வித ஊழல் மோசடிகளும் இன்றி கொள்கை மாறாத, கட்சி, சின்னம், தலைமை போன்றவை மாறாமல் பய ணித்துக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் எவ்வித விட்டுக் கொடுப்பு கள் மற்றும் சலுகைகளுக்காக சோரம் போகவில்லை. அது ஒன்றே எமது நேர் மைக்கான சாட்சியாக அமைந்துள்ளது. எமது தலைமை உறுதியான தலைமை யாக உள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள பாராளு மன்ற தேர்தலில் எமது கட்சி சார்பாக வன்னி தேர்தல் தொகுதியில் மன்னாரில் இருந்து நான் போட்டியிடுகின் றேன்.

எமது மக்கள் எனக்கு பூரண ஆத ரவை வழங்க வேண்டும். தொடர்ந்து எமது கட்சி கொள்கையிலும், உரிமை யிலும் விட்டுக்கொடுப்பு இன்றி செயற் பட்டு வருகிறது. மக்களின் ஆணையை இன்று நாங்கள் கேட்டு நிற்கின்றோம்.

எனவே எனக்கும் உங்கள் வாக்கைச் செலுத்தி என்னை வெற்றி பெறச் செய் யுங்கள்.– என்றார்.

# சீமானால் கட்சியை முன்னேற்ற முடியாது; கட்சியிலிருந்து விலகியவர்கள் குற்றச்சாட்டு

நாம் தமிழர் கட்சியை முன்னேற்றி அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்ல, தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானால் முடியாது என கட்சியில் இருந்து விலகிய முன்னாள் நிர்வாகிகள் குற்றச்சாட்டியுள்ளனர்.

நாம் தமிழர் கட்சியில் இருந்து வெளியேறிய முன்னாள் மாநில ஒருங்கிணைப்பாளர் செ.வெற்றிக்குமரன், நிர்வாகிகள் புகழேந்தி மாறன், சுப தனசேகரன் உள்ளிட்டோர் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது அவர்கள் தெரிவிக்கையில்,

“நாம் தமிழர் கட்சியை, தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சரியான முடிவுகளை எடுத்து முன்னோக்கி கொண்டு செல்வார் என்ற நம்பிக்கையில் அவருடன் பயணித்தோம். பல நேரங்களில் உடன்பாடு இல்லாவிட்டாலும் அமைதி காத்து, பொறுமையுடன் பின்தொடர்ந்தோம். இதனால் எண்ணற்ற இழப்புகளை கடந்த 15 ஆண்டுகளில் சந்தித்திருக்கிறோம்.

கடந்த 2009 இல் தொடங்கப்பட்ட இயக்கம் தற்போது தான் அங்கீகாரம் பெற்ற கட்சியாக மாறியிருக்கிறது. இதுவே மிகப் பெரிய பின்னடைவு. நாம் தமிழர் கட்சியின் அரசியல் கோட்பாடு இந்த மண்ணில்நிலை பெற்றுவிட்டது. ஆனால் இதைஅடுத்த கட்டத்துக்கு முன்னேற்றிகொண்டு செல்வதற்கு இனி சீமானால் முடியாது. அந்த திறனும் பார்வையும்



அவருக்கு இல்லை.

எனவே ‘தமிழர் ஒருங்கிணைப்பு இயக்கம்’ என்ற பெயரில் புதிய அரசியல் அமைப்பை தமிழர் நலன் சார்ந்து உருவாக்கியிருக்கிறோம். முதல்கட்டமாக திருச்சியில் வரும் 27 ஆம் திகதி இலங்கை போரில் உயிர்நீத்த தமிழர்களுக்காக மாவீரர் நாள் நிகழ்ச்சியை நடத்துகிறோம். அதைத்தொடர்ந்து கலந்தாய்வு கூட்டம் நடத்தி எங்களது அரசியல் பயணம் தொடங்கும். நாம் தமிழர் கட்சியின் கொள்கை, கோட்பாடு எங்களால் உருவாக்கப்பட்டது. அதே கோட்பாட்டை ஜனநாயக முறையில் சரியாக எடுத்து செல்வதே இந்த அமைப்பின் நோக்கம்.”– என்றார்.

# மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் லாரன்ஸ் பிஷ்னோய் போட்டியிடுகிறார்



மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட தாதா லாரன்ஸ் பிஷ்னோய்க்கு அம்மாநில அரசியல் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. இதை லாரன்ஸ் ஏற்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பாபா சித்திக் கடந்த 12 ஆம் திகதி மும்பையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு தாதா லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல் சமூக வலைதளத்தில் பொறுப்பேற்றது. இது உண்மையா என மகாராஷ்டிர பொலிஸ் விசாரித்து வருகிறது.

இதையடுத்து நடிகர் சல்மான் கானை கொல்லப்போவதாக லாரன்ஸ் ஏற்கெனவே அறிவித்த விவகாரம் கிளம்பியுள்ளது. இச்சூழலில் மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடுமாறு லாரன்ஸுக்கு அம்மாநில புதிய அரசியல் கட்சியான உத்தர்பாரதிய விகாஸ் சேனா (யு.பி.வி.எஸ்) அழைப்பு விடுத்துள்ளது. போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சிக்கிய லாரன்ஸ் தற்போது குஜராத்தின் சபர்மதி சிறையில் உள்ளார்.

இந்நிலையில் லாரன்ஸுக்கு யு.பி.வி.எஸ். தலைவர் சுனில் சுக்லா எழுதியுள்ள கடிதத்தில் தனது அழைப்பை ஏற்றுக் கொண்டால் அவரது வெற்றிக்காக தங்கள் கட்சி தீவிரமாகப் பாடுபடும் என உறுதி அளித்துள்ளார்.

ராஜஸ்தானின் சமூக அமைப்பான ஸ்ரீராஷ்டிரிய ராஜ்புத் கர்னி சேனாவின் தலைவராக இருந்தவர் சுக்தேவ் சிங் கோகாமேடி.. இவர்,கடந்த வருடம், டிசம்பர் 5 ஆம் திகதி ஜெய்ப்பூரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

என்.ஐ.ஏ. விசாரிக்கும் இந்த வழக்கில் ஒரு பெண் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொலையை தனது கும்பல் செய்ததாக சமூக வலைதளங்களில் லாரன்ஸ் பதிவிட்டிருந்தார். இதையடுத்து லாரன்ஸை என்கவுன்ட்டரில் கொல்லும் பொலிஸாருக்கு 1 கோடியே 11 லட்சம் ரூபா பரிசு வழங்கப்படும் என கர்னி சேனாவின் தற்போதைய தலைவர் ராஜ் ஷெகாவாத் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரது பதிவு வட மாநிலங்களில் வைரலாகி வருகிறது. இதில் லாரன்ஸை கொல்லும் பொலிஸாரின் குடும்பத்துக்கு தங்கள் அமைப்பு முழு பாதுகாப்பு அளிக்கும் என அவர் உறுதியளித்திருப்பதும் சர்ச்சையாகி வருகிறது.

கடந்த வருடம் செப்டம்பரில் காலிஸ்தான் ஆதரவாளர் சுக்காதுனேகா பஞ்சாபில் கொல்லப்பட்டார். இதற்கும் லாரன்ஸ் தனது சமூக வலைதள பதிவில் பொறுப் பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெருவின் முன்னாள் ஜனாதிபதிக்கு 20 வருடங்கள் சிறைத்தண்டனை

பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அலெஜான்ட்ரோ டோலிடோவுக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டமையால் இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை அவர் பெரு அரசாங்கத்தின் ஜனாதிபதியாக செயற்பட்டார்.

பெரு மற்றும் பிரேஸிலை இணைக்கும் வீதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக, கட்டுமான நிறுவனமொன்றிடமிருந்து 35 மில்லியன் டொலர் இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளமை அவர் மீது சுமத்தப்பட்டுள்ள 4 குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

78 வயதான அவர், ஸ்டென்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற பொருளாதார நிபுணராவார்.

லஞ்சம் பெற்றுக்கொண்டமை மற்றும் நிதி தூயதாக்கல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், அமெரிக்காவில் வைத்து 2019 ஆம் ஆண்டில் அவர் கைது செய்யப்பட்டார்.

மேற்படி, கட்டுமான நிறுவனத்திடம் இருந்து லஞ்சம் பெற்றுக்கொண்டமை தொடர்பில் பெரு அரசாங்கத்தின் மேலும் இரு ஜனாதிபதிகளுக்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# இஸ்ரேலின் தாக்குதலில் நஸ்ரல்லாவின் வாரிசு பலி

நஸ்ரல்லாவின் வாரிசு என அழைக்கப்படும் சஃபிதீன் ஒக்டோபர் 4 நடத்தப்பட்ட விமானதாக்குதலில் கொல்லப்பட்டமை உறுதி செய்துள்ளதாக இஸ்ரேல் படைத்துறை வட்டாரங்கள் இன்று அதிகாலை தெரிவித்துள்ளன.

ஹிஸ்புல்லாவின் நிர்வாக சபையின் தலைவரான சஃபிதீன், ஹசன் நஸ்ரல்லா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது வாரிசாகக் கருதப்பட்டார்.

இராணுவத்தின் கூற்றுப்படி, ஒக்டோபர் 4 அன்று நடந்த தாக்குதலின் போது தீவிரவாத குழுவின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான ஹுசைன் அலி ஹசிமாவுடன் சஃபிதீன் கொல்லப்பட்டார்.

இந்த தாக்குதல் பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் நிலத்தடி உளவுத் துறை தலைமையகத்தை குறிவைத்து நடத்தப்பட்டது.

ஹிஸ்புல்லாவின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தாக்குதல் நடத்தப்பட்ட போது தலைமையகத்தில் இருந்தனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

தாக்குதலுக்கு பிறகு சஃபிதீன் தொடர்பில் இல்லை, ஆனால் இன்றுதான் அவரது மரணத்தை உறுதிப்படுத்த முடிந்ததாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது.

ஆனால், அவரது மரணத்தை ஹிஸ்புல்லா இன்னும் அறிவிக்கவில்லை.

2017 ஆம் ஆண்டில் அமெரிக்க வெளியுறவுத்துறையால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட சஃபிதீன், நஸ்ரல்லாவின் உறவினர் மற்றும் அவரைப் போலவே, இஸ்லாத்தின் நபி முகமதுவின் வம்சாவளியைக் குறிக்கும் கருப்பு தலைப்பாகை அணிந்த ஒரு மதகுரு ஆவார்.

கனடா முரசு

பக்கங்கள் 02

புதன்கிழமை 23/10/2024

## ஒன்றாயோவில் இடம் பெற்ற விபத்தில் சிக்கி ஒருவர் மரணம்

ஒன்றாறியோ மாகாணத்தில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து 02



# கட்சி தலைமையிலிருந்து ட்ரூடோவை அகற்றல் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து

**கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை, அவர் சார்ந்த லிபரல் கட்சியிலின் தலைமைப்பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பில் அவரது கட்சியினர் திட்டமிட்டு வருவதாக தொடர்ந்து செய்திகள் வெளியாகிவருகின்றன.**

**லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ட்ரூடோ ராஜினாமா செய்யக் கோரி சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து பெற்ற ஒரு கடிதத்தை அவரிடம் கையளிக்க இருப்பதாக ஊடகங்கள் பல செய்தி வெளியிட்டுள்ளன.**

இது குறித்து பேசிய புத்தாக்கத்துறை அமைச்சரான François - Philippe Champagne, கருத்தில் கொள்ளவேண்டிய சில பிரச்சினைகள் உள்ளது உண்மைதான் என்றும் அது தொடர்பில் இந்த வார இறுதியில் விவாதிக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், லிபரல் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பில் நாளை கூடி விவாதிக்க உள்ளார்கள்.

ட்ரூடோ லிபரல் கட்சித் தலைவராக நீடிக்க ஆதரவு தொடர்பில் கட்சிக்குள் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

எனவே, நாளை கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி விவாதிக்க உள்ளதைத் தொடர்ந்து, ட்ரூடோ லிபரல் கட்சித் தலைவராக நீடிப்பாரா இல்லையா என்பது தெரியவரலாம் என தெரிவிக்கப்படுகிறது. .

# கனடாவில் மண்சரிவு; ஒருவரை காணவில்லை



கனடாவில் வான்கூவார் பெரும்பாக பகுதியில் சீரற்ற கால நிலை காரணமாக ஒருவர் காணாமல் போயுள்ளார்.

குவாரி வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வசித்து வந்த நபர் இவ்வாறு மண் சரிவில் சிக்கி காணாமல் போய் உள்ளார்.

இவ்வாறு காணாமல் போன நபர் தொடர்பிலான எவ்வித விவரங்களும் இதுவரையும் வெளியிடப்படவில்லை.

தீயணைப்பு படையினர் அந்த நபரை தேடும் பணிகளில் ஈடுபட்டனர். மழை வெள்ளம் மீட்பு பணிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக சில பகுதிகளுக்கு பிரவேசிக்க முடியாத நிலை தொடர்பாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

02

# பீதியை ஏற்படுத்தும் இந்திய குற்ற கும்பல்

கனடிய வாழ் மக்களுக்கு பெரும் பீதியை ஏற்படுத்தி வரும் இந்திய குற்ற கும்பல் தொடர்பில் மீண்டும் சர்ச்சை கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கனடாவில் வாழ்ந்து வரும் தென் ஆசிய புலம்பெயர் சமூகத்தை இலக்கு வைத்து இந்த கும்பல் செயல்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் ரிச்மண்ட் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காஷ் ஹீட் இந்த குற்றச் சாட்டை முன் வைத்துள்ளார்.

லாரன்ஸ் பிஷோனி தலைமையிலான குற்றக் கும்பல் ஆண்டுகளாக குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் மக்கள் பெரும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கும்பல் கனடிய மண்ணில் பல்வேறு வன்முறை குற்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித் துள்ளார்.

லோரன்ஸ் பிஷோனி தலைமையிலான கும்பலின் செயற்பாடுகள் குறித்து புலம்பெயர் சமூகம் நன்கு அறிந்து உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் சீக்கிய ஆன்மீகத் தலைவர் ஹார்திப் சிங் நிஜார் படுகொலை சம்பவத்தின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான முரண்பாட்டு நிலை உக்கிரமடைந்துள்ளது.



இரு நாடுகளும் இராஜதந்திரிகளை நாடு கடத்தி இருந்தன.

இவ்வாறான ஒரு பின்னணியில் மேற்படி குற்ற கும்பல் தொடர்பில் இவ்வாறு தகவல்கள் வெளியிடப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் வெளிநாட்டு தற்காலிக பணியாளர்கள் சம்பளம் அதிகரிப்பு

கனடாவில் பணியாற்றி வரும் தற்காலிக வெளிநாட்டு பணியாளர் களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கனடிய மத்திய அரசாங்கம் குறைந்தபட்ச மணித்தியால சம்ப ளத்தை அதிகரிப்பதற்கு திட்டமிட் டுள்ளது.

அதிக கூடிய சம்பள திட்டத்தின் கீழ் இவ்வாறு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் இவ்வாறு சம்பளங் கள் அதிகரிக்கப்படுவதனால் தொழில் தருணர்கள் அதிக அளவு உள்நாட்டு கனேடியர்களை பணியில் அமர்த்த கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாணத்தின் அடிப்படை மணித் தியால சம்பளத்தை விடவும் 20% சம்பளம் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்கம் அதி காரபூர்வ அறிவிப்பு வெளியிட உள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் இந்த சம்பள அதிகரிப்பு அமுல்படுத்தப்பட உள்ளது.

அரசாங்கம் வெளிநாட்டு பணியா ளர்களை விடவும் உள்நாட்டு கனடியர் களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கில் இவ்வாறு சம்ப ளத்தை அதிகரிப்பதாக தெரிவிக் கப்படுகிறது.

தற்போதைய லிபரல் அரசாங்கம் கனடிய பிரஜைகளை விடவும் வெளி நாட்டு பிரஜைகளுக்கு கூடுதல் வாய்ப்பு வழங்கியதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக தற்காலிக வெளிநாட்டு பணியாளர்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பம் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் வீட்டு பற் றாக்குறை போன்ற பிரச்சினைகள் எழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோவில் அடிப்படை மணித்தியால சம்பளம் 28.39 டொலர் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தத் தொகை குறைந்த பட்சம் 34.7 டொலர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒன்றாயோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் த்ரோன்ஹில் பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவத்தில் மற்றவருக்கு காயங்கள் ஏற்பட்டதா என்பது குறித்து தகவல்கள் பொலிஸார் வெளியிடவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. விபத்து காரணமாக மேற்படி பகுதி யின் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

